ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 2020.03.31 |

**ரூ.50 பில்லியன் பெறுமதியான ஆறுமாத மீள்நிதியிடல் வசதியை உருவாக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதோடு, கொவிட் - 19இன் தாக்கத்திற்குள்ளான தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான அறிவுறுத்தல்களையும் நிதி நிறுவனங்களுக்கு வழங்குகின்றது**

கொவிட் - 19இன் தாக்கத்திற்குள்ளான தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு, கடன் மீள்செலுத்தலைப் பிற்போடுதல் (மூலதனம் + வட்டி) மற்றும் ஒரு தொழிற்படு மூலதனக் கடன் உள்ளடங்கலான ஒரு பரந்தளவிலான சலுகைகளை அறிமுகப்படுத்துவதென 2020.03.20இல் அமைச்சரவை அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி ஓர் மீள்நிதியிடல் வசதியை உருவாக்கத் தீர்மானித்துள்ளது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் (நிதி நிறுவனங்கள்) ஆகியவை 2020.03.25இல் ஆரம்பமாகும் இம் மீள்நிதியிடல் வசதியில் பங்குபற்றுவதற்குத் தகுதியானவை என்பதோடு அவை அறிவிக்கப்பட்ட சலுகைகளையும் வழங்கலாம்.

சலுகைகள் மற்றும் மீள் நிதியிடல் வசதியின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

1. **பொது விதிகளும் நிபந்தனைகளும்**

   1.1. இத்திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெறத்தகுதியான வியாபாரங்கள்/ துறைகள்:

   அ) தயாரிப்புக் கைத்தொழில், பணிகள், விவசாயம் (செய்முறை உள்ளடங்கலாக) கட்டுமானம், பெறுமதிசேர்ப்பு மற்றும் ரூ.1 பில்லியனுக்கு உட்பட்ட புரள்வுடனான அங்கீகரிக்கப்பட்ட உள்ளக மருந்து விநியோகத்தர்கள் உள்ளடங்கிய வணிக வியாபரங்கள் போன்ற வியாபாரத் துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்.

ஆ) கொவிட் - 19 தொடர்புடைய விளைவுகளால் பாதிக்கப்பட்டவைகள்:

- சுற்றுலா, ஆடைக் கைத்தொழில், தொழில் இடையூறுகள் மற்றும் வெளிநாடுகளின் முடங்கலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத் திரவியங்கள், தொடர்புடைய வழங்கல் விநியோகத்தர்கள் உள்ளடங்கலாக நேர் மற்றும் நேரில் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட வியாபாரங்கள்.
- தொழிலை அல்லது வருமானத்தை இழந்த சுயதொழில் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள்.
- வெளிநாட்டு நாணயத்தில் கடனை மீளச்செலுத்தவேண்டியுள்ளவர்களும் வருமானம்/ வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுமான வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிப்போர்.

1.2. நீண்டகாலக் கடன்கள், குத்தகை வசதிகள், அடைவுக் கடன்கள், மேலகதிப் பற்றுக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயத்திலும் ரூபாவிலும் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக நிதி வசதிகள் ஆகியவை தகுதியான கொடுகடன் வசதிகளாக உள்ளன. இருப்பினும், இறக்குமதிகளானவை மருந்துகள், மருத்துவ உபகரணம், உணவு, உரம், அத்தியாவசிய மூலப் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணம் ஆகியவற்றுக்காக மட்டுப்படுத்தப்படுகிறது.

1.3. கொவிட் - 19 தொடர்புடைய விளைவுகளால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்கள் யாவரும் இணையவசதிகள் அல்லது ஏனைய வழிமுறைகள் மூலம் 2020.04.30 இற்கு முன்னர் இத்திட்டத்தின் கீழ் தொடர்புடைய நிதி நிறுவனங்களிடமிருந்து சலுகைகளைக் கோரமுடியும். அவ்வாறான கோரிக்கைகளை அவை கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்கிடையில் செயன்முறைப்படுத்துமாறு நிதி நிறுவனங்கள் கோரப்படுகின்றன. அத்தகைய விண்ணப்பதாரிகளின் தற்போதைய கடன்களின் அறவீடானது செயன்முறை நிறைவடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

## 2. 2020.03.25 வரை முறையாக திருத்திச் செலுத்தப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன்களிற்கான சலுகைகள் (செயற்படு கடன்கள்)

2.1. 2020.04.30 அல்லது அதற்கு முன்னர் நிதி நிறுவனங்களுக்கு தகுதிவாய்ந்த கடன் பெறுநர்கள் எழுத்து மூல கோரிக்கையை விடுக்குமிடத்து தகுதிவாய்ந்த அனைத்து ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணய நீண்டகால கடன்களுக்குரிய மூலதனம் மற்றும் வட்டி மீளப்பெறுதல் ஒத்திவைத்தல் தொடர்பாக கீழே குறிப்பிடப்படுகின்றது.

அ) அனைத்து முச்சக்கர வண்டிகள், பாடசாலை வான்கள், லொறிகள், சிறிய பொருட்களுக்கான போக்குவரத்து வாகனங்கள், பஸ்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்கள்/ உரிமையாளர்களினால் இயக்கப்படும் மோட்டார் வண்டிகள் மற்றும் ரக்சிகள் போன்ற சொத்துக்களுக்குரிய குத்தகை வாடகைகள் மீளப்பெறல் ஆறுமாத காலத்திற்கு.

ஆ) அனைத்து தனியார் துறை நிர்வாக அதிகாரிகள் அல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தனிநபர் கடன்கள் மீளப்பெறல் 2020.05.30 வரை.

இ) ஒரு மில்லியனுக்கு குறைந்த தனிநபர் கடன்கள் மற்றும் குத்தகைகள் மீளப்பெறுதல் மூன்றுமாத காலத்திற்கு.

ஈ) பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், சுற்றுலா, ஆடைகள், பெருந்தோட்டத் துறை, தகவல்தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய உள்ளீட்டு சேவை வழங்குநர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் வசதிகள் மீளப்பெறுவது ஆறு மாத காலத்திற்கு.

உ) மேலே 1 (அ) மற்றும் (ஆ)கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அனைத்து வணிகங்கள் அல்லது துறைகளுக்கு வழங்கப்பட்ட வசதிகள் ஆறு மாத காலத்திற்கு.

2.2. 2020.03.25 வரையிலான காலப்பகுதியில் தீர்வுசெய்யப்பட வேண்டிய அல்லது முதிர்ச்சியடைந்த அல்லது மதிப்பாய்வு செய்யப்பட்ட நிரந்தர மேலதிகப்பற்று வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்பட வேண்டும். தகுதியுடைய கடன் பெறுநர்களது தற்காலிக மேலதிகப் பற்று வசதிகள் 2020.03.25இல் காலாவதியாகுமிடத்து அவை இரண்டு மாதங்களிற்கு நீடிக்கப்பட வேண்டும். நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் இத்தகைய வசதிகளுக்கு அதிகபட்சம் 13 சதவீத வட்டி ஒதுக்கப்படும்.

2.3. 2020.03.25 வரையிலான காலத்தில் தீர்வுசெய்யப்பட வேண்டிய அல்லது முதிர்ச்சியடைந்த அல்லது மதிப்பாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த வர்த்தக நிதி வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்படும்.

2.4. மேலும், 2020.03.25 வரையிலான காலப்பகுதியில் தீர்வு செய்யப்பட வேண்டிய மற்றும் முதிர்ச்சியடைந்த அடைவு வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்படும்.

**3. 2020.03.25இல் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலுவையிலுள்ள ஏற்கனவேயுள்ள கடன்களிற்கான சலுகைகள் (செயற்படாக் கடன்கள்)**

3.1 2020.09.30 வரை கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஒத்திவைக்கப்படும் அதேவேளை 2020.03.25 வரை விதிக்கப்பட்ட அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

3.2 2020.03.25இல் கடன் பெறுநரினால் திருப்பிச் செலுத்தப்பட்ட ஆரம்ப மூலதத்தின் சதவீதத்தை (அதாவது 50 சதவீதத்திற்கும் அதிகமான அல்லது 50 சதவீதத்திற்கும் குறைவாக) அடிப்படையாகக் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீளமைக்கப்படும் மற்றும் இத்திட்டத்தில் கருத்திற்கொள்ளப்படும் திகதிவரையுள்ள மொத்த மற்றும் செலுத்தப்படாத நிலுவை தவணைகளின் ஒரு சதவீதம் பிற்போடப்படும். செலுத்தப்படவேண்டிய மூலதன மீதி மூன்று வருடகாலத்திற்கு மீளமைக்கப்பட்டு செலுத்தப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் கடன் பெறுநர் மீளமைக்கப்பட்ட கடன்களை செலுத்திய பின்னர் நிதி நிறுவனங்கள் பிற்போட்ட வட்டியை தள்ளுபடி செய்யும்.

3.3 இரு தரப்பினருக்கும் இடையே செய்யப்பட்ட கடன் மீள்செலுத்துகை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்தத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்படாக் கடன்பெறுநர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட கடன் மீட்பு அல்லது சட்ட நடவடிக்கைகளை அனைத்து நிதியியல் நிறுவனங்களும் நிறுத்த வேண்டும்.

**4. புதிய தொழில்படு மூலதனம் அல்லது முதலீட்டுத் தேவைக்கான கடன்**

4.1 தகுதிவாய்ந்த கடன்பெறுநர்கள் நம்பகரமான வணிகத் திட்டத்தைச் சமர்ப்பித்து, குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் இணங்கினால் தொழிற்படு மூலதனம் அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காக மேலதிகக் கடனை அல்லது புதிய கடன் வசதியை இலங்கை ரூபாவில் பெற்றுக்கொள்ள நிதி நிறுவனங்களை கோரமுடியும். மேலும், இவ்விரு வகையான கடன்களினதும் மீள்செலுத்துகை 2020.03.25 இலிருந்து 2020.09.30 வரையிலான காலப்பகுதியில் ஒத்திவைக்கப்படும்.

அ) 4 சதவீத வருடாந்த வட்டிக்குச் சமனான வட்டி வீதத்தில், இரு வருட கால தொழிற்படு மூலதன நோக்கத்திற்கான இலங்கை ரூபாய்க் கடன் வசதியை தகுதிவாய்ந்த செயற்படு மற்றும் செயற்படாக் கடன்பெறுநர்கள் பெற்றுக்கொள்ளலாம். கடன் தொகையானது, தொழிற்படு மூலதன சுழற்சித்

தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கடன் பெறுநரொருவருக்கு வங்கியொன்றில் ரூ.25 மில்லியன் மற்றும் கடன் பெறுநரொருவருக்கு ஏனைய நிதி நிறுவனங்கள் ரூ.10 மில்லியன் அல்லது இரண்டு மாதங்களுக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டிற்கான அதிகமான தொகைக்கு (தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு ரூ.25 மில்லியனுக்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில்) மேற்படாததாகக் காணப்படும்.

ஆ) முதலீட்டுத் தேவைக்கான ரூபாய்க் கடன் வசதி ஐந்து வருடங்களிற்கு வங்கியொன்றில் கடன்பெறுநருக்கு ரூ.300 மில்லியனுக்கு மேற்படாத தொகை செயற்படு கடன்பெறுநரால் வணிகத் தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கு, அதிகபட்ச சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கும் வீதத்துடன் 1.5 சதவீதத்தினை கூட்டுதவதற்கு சமனான வட்டி வீதத்தில் வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

## 5. ஏனைய சலுகைகள்

5.1 நிதி நிறுவனங்கள், 2020.09.30 வரையான காலப்பகுதி வரை காசோலைத் திரும்பல்களுக்கு கட்டணம் அறவிடல், கொடுப்பனவை நிறுத்துதல் மற்றும் அனைத்து கடனட்டைகள் மற்றும் ஏனைய கடன் வசதிகளுக்கான தாமதக் கட்டணம் என்பவற்றை நிறுத்த வேண்டும்.

5.2 மேலும், இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்மறையான அறிக்கைகள் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கடன் பெறுநர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டுமெனவும், அத்தகைய விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்குப் பொருத்தமான வழிமுறையைக் கையாள வேண்டுமென நிதி நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5.3 இந்த அசாதாரண காலப்பகுதியில் வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்க இடத்தை வழங்க நாணயச் சபை பல்வேறு அசாதாரண ஒழுங்குமுறைப்படுத்தல் தளர்த்தல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகைய தளர்த்தல்களில், எந்தவொரு கடன் காலதாமதத்திற்கும் உரித்தில்லாத கடன் பெறுநர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களைச் செலுத்துவதற்கு மேலதிக 60 நாட்கள் கால அவகாசத்தை வழங்குவதற்கான அனுமதியும் உள்ளடங்கும்.

இத்தகைய கடுமையான காலகட்டத்தில் சில நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள பொதுமக்கள் தத்தமது வங்கிக் கிளைகளை 2020.04.30 அல்லது அதற்கு முன்னர் தொடர்புகொண்டு தமக்கு பொருத்தமான சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி கேட்டுக்கொள்கின்றது. மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தை செயற்படுத்துவதற்கு வசதியளிக்க இலங்கை மத்திய வங்கி வங்கிகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும்.

இது தொடர்பாக நிதி நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க விரிவான சுற்றறிக்கை இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(https://www.cbsl.gov.lk/en/laws/directions-circularsguidelines-for-banks)